27.7.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### கொடைக்கானலில் தொடர் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

கொடைக்கானலில் கடந்த சில தினங்களாக மழை பெய்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கொடைக்கானல் பகுதிகளில் விளைவிக்கப்படும் கேரட், பூண்டு, பீட்ரூட் உள்ளிட்ட பயிர்களுக்கு தண்ணீர் அதிகம் தேவைப்படும். ஆனால், கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக தண்ணீர் இல்லாமல் இருந்தது. இதனால், விவசாயிகள் கவலையில் இருந்தனர். இந்நிலையில், கடந்த சில தினங்களாக கொடைக்கானலில் பரவலாக மழை பெய்து வருகிறது.

இந்த மழை விவசாயத்துக்கு ஏற்றதாக உள்ளதால், விவசாயிகள் தற்போது நிலங்களில் தண்ணீர் விடுதல், களையெடுத்தல், உரமிடுதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். மேலும், நீரோடைப் பகுதிகளிலும் தண்ணீர் வரத்து தொடங்கியுள்ளதால், புறநகர்ப் பகுதிகளில் தண்ணீர் பிரச்னை ஓரளவுக்கு குறையத் தொடங்கியுள்ளது. இதனால், பொதுமக்களும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

வாய்க்கால்களை சீர்படுத்த கோரிக்கை: வில்பட்டி ஊராட்சிப் பகுதிகளில் உள்ள சாலையோர வாய்க்கால்கள் முள்புதர்கள் மண்டிக் கிடப்பதால், தண்ணீர் சாலைகளில் செல்கிறது. எனவே, சீரமைக்க வேண்டுமென கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து, வில்பட்டி ஊராட்சி மன்ற துணைத் தலைவர் காமராஜ் கூறுகையில், வில்பட்டி ஊராட்சிக்குள்பட்ட பகுதிகளில் நடைபெற உள்ள பணிகள் குறித்து கொடைக்கானல் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்துக்கு தகவல் அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் கிடைத்தவுடன் பணிகள் தொடங்கப்படும் என்றார்.

## அருப்புக்கோட்டையில் பலத்த மழை

அருப்புக்கோட்டையில் செவ்வாய்க்கிழை மாலை பலத்த மழை பெய்தது.

அருப்புக்கோட்டை பகுதியில் கடந்த சில நாள்களாக பகலில் வெயிலும், மாலை நேரத்தில் வானம் மேக மூட்டத்துடனும் காணப்பட்டு இருந்தது. இந்நிலையில்,செவ்வாய்க்கிழமை மாலை 6.45 மணி முதல் சுமார் ஒரு மணி நேரம் பலத்த மழை பெய்தது. இதனால் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியது.

பழைய தேவாங்கர் கல்லூரிச்சாலை, ஸ்ரீஅமுதலிங்கேஸ்வரர் கோயில் நாற்சந்தி உள்ளிட்ட பகுதிகளில் தண்ணீர் தேங்கியதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

சிவகாசியில் லேசான மழை: சிவகாசியில் செவ்வாய்க்கிழமை மாலை லேசான மழை பெய்தது.

மாலை சுமார் 5.10 மணியளவில் பெய்யத் தொடங்கிய மழை விட்டுவிட்டு மிதமாக பெய்தது. கடந்த சில நாள்களாக வெயிலினால் அவதிப்பட்டு வந்த மக்கள் இந்த மழையினால் மகிழ்ச்சி அடைந்தனர்.

## கனமழையால் விவசாயிகள் மகிழ்ச்சி; மொடக்குறிச்சியில் 70 மி.மீ. மழைப் பதிவு

ஈரோடு மாவட்டம் முழுவதும் திங்கள்கிழமை இரவு பரவலாக பெய்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

ஈரோடு மாவட்டம் முழுவதும் கடந்த சில வாரங்களாக கோடைக்கு நிகரான வெயில் கொளுத்தி வந்தது. பெரும்பாலான குளம், குட்டைகள் நீரின்றி வறண்டு காணப்படும் நிலையில் பருவ மழை ஈரோடு மாவட்டத்துக்கு கைகொடுக்கவில்லை.

இந்நிலையில், வெப்ப சலனம் காரணமாக திங்கள்கிழமை இரவு மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்ததால் விவசாயிகள் பெரும் மகிழ்ச்சியடைந்தனர். திடீர் மழையால் வெயிலின் தாக்கம் குறைந்து குளிர்ந்த சீதோஷ்ண நிலை நிலவியது.

மாவட்டத்தில் அதிக அளவாக மொடக்குறிச்சியில் 70 மி.மீ., கொடிவேரியில் 56.6 மிமீ., பவானியில் 52.2 மிமீ. மழை அளவு பதிவாகி உள்ளது. பிற இடங்களில் பதிவான மழை அளவு விவரம் ( மி.மீட்டரில்): சத்தி-22, கோபி-17,

எலந்தகுட்டைமேடு-14, கவுந்தப்பாடி-21, பெருந்துறை-21, ஓலப்பாளையம்-30, புங்கம்பாடி-34, ஈரோடு-30, அறச்சலூர்-41, சென்னிமலை-38, சிவகிரி-2, முத்தூர்-21, கொடுமுடி-0.4, காங்கயம்-2 மி.மீ.

## எழுமாத்தூர் விற்பனைக் கூடத்தில் தேங்காய், கொப்பரை ஏலம்

எழுமாத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ. 24 லட்சத்துக்கு தேங்காய், கொப்பரை ஏலம் நடைபெற்றது.

இந்த ஏலத்துக்கு, எழுமாத்தூர் மற்றும் சுற்று வட்டாரப் பகுதி விவசாயிகள் 875 மூட்டையில் 36 ஆயிரத்து 474 கிலோ எடையுள்ள கொப்பரைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

இதில், முதல் தரம் அதிகபட்ச விலையாக கிலோ ரூ. 54.60-க்கும், குறைந்தபட்ச விலை ரூ. 50.15-க்கும், இரண்டாம் தரம் அதிகபட்ச விலை ரூ. 51.20-க்கும், குறைந்தபட்ச விலை ரூ. 49-க்கும் விற்பனையானது. மொத்தம் ரூ. 20 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது. இதேபோல், 36 ஆயிரத்து 486 கிலோ எடையுள்ள தேங்காய்கள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. இதில், அதிகபட்ச விலையாக டன்னுக்கு ரூ. 14 ஆயிரத்து 172-க்கும், குறைந்தப்பட்ச விலை டன்னுக்கு ரூ. 10 ஆயிரத்து 889-க்கும், சராசரி விலை ரூ. 12 ஆயிரத்து 412-க்கும் விற்பனையானது. மொத்தம் ரூ. 4 லட்சத்து 81 ஆயிரத்துக்கு விற்பனை நடைபெற்றது

## கால்நடை பாதுகாப்பு சிறப்பு முகாம் தொடக்கம்

கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மாவட்டம் முழுவதும் 216 இடங்களில் சிறப்பு முகாம்கள் தொடங்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர் தெரிவித்தார்.

ஈரோடு ஊராட்சி ஒன்றியத்துக்குள்பட்ட பழனிகவுண்டன்பாளையம் கிராமத்தில் சிறப்பு முகாமை மாவட்ட ஆட்சியர் பிரபாகர் தொடங்கிவைத்து பேசியதாவது:

ஏழை, எளிய மக்களின் கால்நடைகளுக்கு இலவச மருத்துவ வசதி அளிப்பதற்காக கால்நடை பாராமரிப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கால்நடை மருத்துவ வசதி இல்லாத கிராமங்களில் உள்ள கால்நடை வளர்ப்போர்

பயன்பெறும் வகையில் கால்நடைகளுக்கு அந்தந்த கிராமங்களிலேயே மருத்துவ வசதி மேற்கொள்ள இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இம்மாவட்டத்தில் 2016-17-ஆம் ஆண்டு 216 முகாம்கள் ரூ. 9 லட்சத்து 7 ஆயிரத்து 200 செலவில் நடத்தப்படும். இம்முகாமில் பங்குபெறும் கால்நடைகளுக்கு சிகிச்சை, ஆண்மை நீக்கம், தடுப்பூசி, சினை பரிசோதனை, குடற்புழு நீக்கம், மலடு நீக்க சிகிச்சை, செயற்கைமுறை கருவூட்டல் மற்றும் அறுவை சிகிச்சை ஆகியவை கால்நடை மருத்துவக் குழு மூலம் அளிக்கப்படும் என்றார்.

இம்முகாமில், கால்நடைகளை சிறப்பாக வளர்த்தவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் பரிசு வழங்கினார். இந்நிகழ்ச்சியில், கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் ரவிச்சந்திரன், துணை இயக்குநர் சந்திரசேகரன் உள்பட அரசு அலுவலர்கள், கால்நடை வளர்போர் பலர் கலந்து கொண்டனர்.

## மாரண்டஅள்ளியில் 140 மி.மீ.மழை

தருமபுரி மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை காலை 8 மணி வரை பதிவான மழை அளவில், அதிகபட்சமாக மாரண்டஅள்ளியில் 140 மி.மீ. வரை பதிவாகியுள்ளது. திங்கள்கிழமை முற்பகலில் அதிக வெயில் இருந்தாலும், பிற்பகலில் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. சில இடங்களில் பலத்த மழையும் பெய்தது. இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை காலை 8 மணி வரை பெய்த மழையளவில் மாரண்டஅள்ளியில் மாவட்டத்தில் அதிகபட்சமாக 140 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

தருமபுரியில் 65 மி.மீ, அரூரில் 7.3 மி.மீ, பாப்பிரெட்டிப்பட்டியில் 9 மி.மீ, பாலக்கோட்டில் 97 மி.மீ, பென்னாகரத்தில் 10 மி.மீ, ஒகேனக்கல்லில் 57.20 மி.மீ, மாவட்ட ஆட்சியரகத்தில் 61 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. மாவட்டத்தின் மொத்த மழை அளவு 385 மி.மீ. மாவட்டத்தின் சராசரி மழை அளவு 55.07 மி.மீ.

## தருமபுரி மாவட்டத்தில் 5 கிராமங்களில் இயற்கை வேளாண்மை குறித்த விழிப்புணர்வு பயிற்சி

தருமபுரி மாவட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களால் தேர்வு செய்யப்பட்டுள்ள கிராம ஊராட்சிகளில் இயற்கை வேளாண்மை (அங்கக வேளாண்மை) குறித்த விழிப்புணர்வு பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் தலா ஒரு கிராம ஊராட்சியைத் தத்தெடுத்து அவற்றை முன்னேற்ற பங்களிக்க வேண்டும் என்ற பிரதமர் மோடியின் முன்மாதிரித் திட்டத்தில் தருமபுரி மாவட்டத்தில் 10 கிராம ஊராட்சிகள், 10 எம்.பி.க்களால் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இங்கு மத்திய வேளாண் அமைச்சகத்தைச் சேர்ந்த "இயற்கை வேளாண் மையம்' மூலம் விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மைப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த பழைய தருமபுரி கிராமத்தில் விழிப்புணர்வுப் பயிற்சி திங்கள்கிழமை நடைபெற்றது. தொடர்ந்து செவ்வாய்க்கிழமை அரூர் வட்டத்தைச் சேர்ந்த சின்னகுப்பம் கிராமத்தில் விழிப்புணர்வுப் பயிற்சி நடைபெற்றது.

இப் பயிற்சிகளில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஆர்.ஆர். சுசீலா, மாவட்ட வேளாண் இணை இயக்குநர் சி. ராஜேந்திரன், துணை இயக்குநர் என். மதுபாலன், பெங்களூரு இயற்கை வேளாண்மை மண்டல மையத்தின் இளநிலை அறிவியல் அலுவலர் முனைவர் சந்திர பிரபா மற்றும் இயற்கை விவசாயி பெருமாள் உள்ளிட்டோர் பயிற்சி அளித்தனர். ஒவ்வொரு பயிற்சியிலும் தலா 50 விவசாயிகள் பங்கேற்றனர். இயற்கை வேளாண்மைக்கான இடுபொருள்கள் தயார் செய்வது குறித்தும், மத்திய அரசின் "மண் வள அட்டை' பெறுவது குறித்தும் இந்தப் பயிற்சியில் விளக்கப்பட்டது.

தொடர்ந்து புதன்கிழமை மொரப்பூர் வட்டம் பசுவபுரம் கிராமத்திலும், வியாழக்கிழமை பாலக்கோடு வட்டம் ஜிட்டான்டஅள்ளி கிராமத்திலும், வெள்ளிக்கிழமை காரிமங்கலம் வட்டம் அண்ணாமலைஅள்ளி கிராமத்திலும் விழிப்புணர்வுப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன. ஆகஸ்ட் மாதம் அடுத்த 5 கிராமங்களில் இப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

## தருமபுரியில் 17,300 விவசாயிகளுக்கு "மண் வள அட்டைகள்' வழங்கும் பணி இன்று தொடக்கம்

விவசாயிகளின் நிலத்தில் மண் மாதிரி எடுத்து அதன் தன்மைக்கேற்ப உரங்களைப் பயன்படுத்த ஆலோசனை வழங்கும் வகையில், மத்திய அரசு தொடங்கியுள்ள "மண் வள அட்டை' வழங்கும் பணி தருமபுரி மாவட்டத்தில் புதன்கிழமை தொடங்குகிறது.

இத் திட்டத்தில் மாவட்டம் முழுவதும் 17,300 விவசாயிகளின் நிலங்களில் மண் மாதிரி எடுத்துப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, 3,000 விவசாயிகளுக்கான அட்டைகள் வழங்குவதற்குத் தயார் நிலையில் உள்ளன.

நாடு முழுவதும் 4.67 கோடி விவசாயிகளின நிலங்களில் மண் மாதிரிப் பரிசோதனைகளை மேற்கொண்டு அவர்களுக்கான "மண் வள அட்டை' வழங்க மத்திய அரசின் வேளாண் அமைச்சகம் முடிவு செய்தது.

இதன்படி, தமிழ்நாட்டில் 21 லட்சம் விவசாயிகளுக்கு இந்த அட்டைகளை வழங்க கடந்த மாதம் முழுவதும் மண் வளப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாசன வசதியுள்ள நிலமானால் இரண்டரை ஏக்கருக்கு ஒரு மாதிரி எடுத்தும், வானம் பார்த்த பூமியாக உள்ள மானாவாரி நிலங்களானால் 10 ஹெக்டேருக்கு ஒரு மாதிரியும் எடுக்கப்பட்டது.

இந்த மாதிரிகள் மீதான ஆய்வுகள் இதற்கென நாடு முழுவதும் பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டன. விவசாயிக்கு தனி எண் வழங்கப்பட்டு, அத்துடன் விவசாயியின் ஆதார் எண், செல்லிடப்பேசி எண் ஆகியவையும் இணைக்கப்பட்டன.

மண் வளப் பரிசோதனை மேற்கொள்ள ஒவ்வொரு மாதிரிக்கும் மத்திய அரசு ரூ. 200 ஒதுக்கீடு செய்துள்ளது. மாநில அரசின் வேளாண் அதிகாரிகள் இந்தத் தொகையைக் கொண்டு மண் வளப் பரிசோதனை மேற்கொள்ளும் பணியைத் தீவிரமாக செய்து வருகின்றனர்.

எடுக்கப்பட்ட மண் மாதிரிகளை ஆய்வு செய்து அந்தந்த நிலத்திலுள்ள உப்பு, அங்ககக் கரிமம், தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து, சல்பர், துத்தநாகம், போரான், இரும்பு, மாங்கனீசு, தாமிரம் போன்ற சத்துகளின் விவரம், நிலத்தில் போட வேண்டிய இயற்கை உரம், உயிர் உரம் மற்றும் உரத் தொகுப்புகள் குறித்த பரிந்துரைகளையும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்கின்றனர்.

இந்தப் பதிவேற்றத்தின் விவரங்கள் அனைத்தும் விவசாயிக்கு குறுஞ்செய்தியாகச் சென்றடையும். மேலும், மண் வள அட்டையிலும் குறிப்பிடப்பட்டிருக்கும். "மண் வளம் குறித்த போதிய விழிப்புணர்வின்றி அளவுக்கு அதிகமாக உரத்தை நிலத்தில் கொட்டி, வளத்தைக் கெடுப்பதைத் தடுக்கலாம் என்பதே இதன் நோக்கம்' என்கிறார்கள் வேளாண் அதிகாரிகள்.

தற்போது தருமபுரி மாவட்டத்தில் பழைய தருமபுரி கிராமத்தில் புதன்கிழமை நடைபெறவுள்ள மக்கள் தொடர்பு முகாமில், 10 விவசாயிகளுக்கு மண் வள அட்டைகளை வழங்கவுள்ளார் மாவட்ட ஆட்சியர் கே. விவேகானந்தன். தொடர்ந்து மாவட்டத்தின் இலக்கான 17,300 விவசாயிகளில், ஆய்வு முடித்த 3 ஆயிரம் விவசாயிகளுக்கு ஆகஸ்ட் இறுதிக்குள் மண் வள அட்டைகளை வழங்கி முடிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## திருச்செங்கோட்டில் 63 மி.மீ. மழை பதிவு

நாமக்கல் மாவட்டத்தில் திங்கள்கிழமை காலை 8 மணி முதல் செவ்வாய்க்கிழமை காலை 8 மணி வரையிலான 24 மணி நேரத்தில் திருச்செங்கோட்டில் அதிகபட்சமாக 63 மி.மீ மழைப் பதிவானது.

நாமக்கல் மாவட்டக்தில் நாமக்கல், சேந்தமங்கலம், கொல்லிமலை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் கடந்த இரண்டு நாள்களாக பலத்த மழை பெய்து வருகிறது. மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் திங்கள்கிழமை இரவு பரவலாக மழை பெய்தது. அதில் அதிக பட்சமாக திருச்செங்கோட்டில் 63 மி.மீ மழைப் பதிவானது. பிற பகுதிகளில் மழை அளவு விவரம்(மி.மீ): எருமப்பட்டி 40, குமாரபாளையம் 49, மங்களபுரம் 24, நாமக்கல் 28, புதுச்சத்திரம் 5, ராசிபுரம் 53, சேந்தமங்கலம் 43.

## ஒரு மணி நேரம் பலத்த மழை

கரூரில் செவ்வாய்க்கிழமை இரவு சுமார் ஒரு மணிநேரம் இடைவிடாது பெய்த மழையால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

தமிழகத்தில் அதிகளவு மழை பெய்த போதிலும் கரூர் மாவட்டத்தில் அவ்வப்போது லேசான தூறல்களுடன் மழை பெய்துவந்தது. கடந்த 3 தினங்களாக பகலில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இந்நிலையில்

செவ்வாய்க்கிழமை காலை முதல் மாலை வரை வெயில் மக்களை வாட்டி வதைத்தது.

இதையடுத்து மாலை 6 மணியளவில் கருமேகங்கள் திரண்டிருந்தன.

வழக்கம்போல மழை பெய்யவில்லை. இந்நிலையில் இரவு 8 மணியளவில் லேசாக தொடங்கிய மழை பின்னர் வலுக்கத் தொடங்கியது. இதனால் சாலைகளில் மழைநீர் வெள்ளம்போல ஓடியது.

கரூர் பேருந்து நிலையம், சுங்ககேட் ஆதிபேக்கரி பகுதியில் மழைநீருடன் கழிவு நீர் வாய்க்கால்களை விட்டு வெளியேறி சாலைகளில் ஓடியதால் வாகன ஓட்டிகள் மிகவும் அவதிக்குள்ளாகினர். தொடர்ந்து இடைவிடாது இரவு 9.10 மணி வரை பெய்த மழையால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

## அதிராம்பட்டினத்தில் 52.4 மி.மீ. மழை

தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக அதிராம்பட்டினத்தில் 52.4 மி.மீ. மழை பெய்தது.

மாவட்டத்தில் பல இடங்களில் திங்கள்கிழமை இரவு பரவலாக மழை பெய்தது. மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணிநேரத்தில் பெய்த மழையளவு (மில்லிமீட்டரில்):

அதிராம்பட்டினம் 52.4, ஈச்சன்விடுதி 35, அணைக்கரை 34.8, திருவையாறு 26, பேராவூரணி 19, அய்யம்பேட்டை 18, கல்லணை 17, பூதலூர் 16.8, பாபநாசம் 16, தஞ்சாவூர் 10, மதுக்கூர் 8.4, பட்டுக்கோட்டை 8, வல்லம் 6, வெட்டிக்காடு 5.8, ஒரத்தநாடு 2.6, மஞ்சலாறு 1.2, திருக்காட்டுப்பள்ளி, திருவிடைமருதூர் தலா 1.

### திருநெல்வேலிக்கு ஆயிரம் டன் அரிசி

நீடாமங்கலத்திலிருந்து ஆயிரம் டன் அரிசி பொதுவிநியோகத் திட்டத்துக்காக திருநெல்வேலிக்கு செவ்வாய்க்கிழமை அனுப்பி வைக்கப்பட்டது.

பாமணி மத்திய சேமிப்புக் கிடங்கு, சுந்தரக்கோட்டை நவீன அரிசி ஆலை ஆகியவற்றிலிருந்து ஆயிரம் டன் எடையுள்ள பொதுரக அரிசி நீடாமங்கலம் ரயில் நிலையத்துக்கு லாரிகளில் செவ்வாய்க்கிழமை கொண்டுவரப்பட்டது.

பின்னர், நுகர்பொருள் வாணிபக்கழக அலுவலர்கள் முன்னிலையில், சரக்கு ரயிலின் 21 பெட்டிகளில் ஏற்றப்பட்டு, பொதுவிநியோகத் திட்டத்துக்காக திருநெல்வேலிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### பேரங்கியூரில் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்

விழுப்புரம் அருகே உள்ள பேரங்கியூர் கிராமத்தில் கால்நடை பாதுகாப்புக் திட்ட மருத்துவ முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் எம்.லட்சுமி பங்கேற்று கால்நடை மருத்துவ முகாமைக் தொடங்கி வைத்தார். முதல்வர் உத்தரவின் பேரில், சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் நடத்தப்படுவதாக ஆட்சியர் தெரிவித்தார். தொடர்ந்து, மாவட்டம் முழுவதும் நடைபெற உள்ள கால்நடை மருத்துவ முகாம்களை பயன்படுத்திக் கொள்ள அவர் அறிவுறுத்தினார். கால்நடைத் துறை மண்டல இணை இயக்குநர் மாதேஷ்வரன், துணை இயக்குநர்கள் ராமமூர்த்தி, சாந்தி, உதவி இயக்குநர்கள் குருவையா, ராஜன், மருத்துவர் இப்ராகிம் முன்னிலை வகித்தனர். முகாமில், அரசு கால்நடை மருத்துவக் குழுவினர் பங்கேற்று 525 கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தனர். 375 ஆடுகள், கன்றுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது.

## திண்டிவனத்தில் 127 மி.மீ. மழை

விழுப்புரம் மாவட்டத்தில் அதிகபட்சமாக திண்டிவனம் சுற்றுவட்டார பகுதியில் திங்கள்கிழமை 127 மி.மீ. மழை பெய்துள்ளது. மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக அவ்வப்போது ஒருசில இடங்களில் மழை பெய்து வருகிறது. இதில், திங்கள்கிழமை மாலை தொடங்கி திண்டிவனம், திருக்கோவிலூர், செஞ்சி, சங்கராபுரம் உள்ளிட்ட இடங்களில் கனமழை கொட்டித் தீர்த்தது. இதையடுத்து விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். செவ்வாய்க்கிழமை நிலவரப்படி, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக திண்டிவனத்தில் 127 மி.மீ. மழை பெய்துள்ளது. செஞ்சியில் 80 மி.மீ. மழையும், திருக்கோவிலூரில் 75 மி.மீ. மழையும் பதிவானது. சங்கராபுரத்தில் 57 மி.மீ, வானூர் 40 மி.மீ., விழுப்புரம் 23 மி.மீ., உளுந்தூர்பேட்டை 12 மி.மீ. மழை பெய்துள்ளது. கள்ளக்குறிச்சியில் 2 மி.மீ. மழை பெய்துள்ளது.

## மணிலா இயந்திர விதைப்புக்கு அரசு மானியம்

திண்டிவனம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் இயந்திரம் மூலம் மணிலா விதைப்புக்கு அரசு மானியம் வழங்குவதாக வேளாண்மை உதவி இயக்குநர் கென்னடி ஜெபக்குமார் திங்கள்கிழமை தெரிவித்தார்.

திண்டிவனம் அடுத்த தென்பசியார், ஏந்தூர், கட்டளை உள்ளிட்ட பகுதிகளில் மணிலா இயந்திர விதைப்பு குறித்த செயல்விளக்கப் பயிற்சி முகாம் நடைபெற்றது. முகாமுக்கு முன்னிலை வகித்த வேளாண்மை உதவி இயக்குநர் கென்னடி ஜெபக்குமார் விவசாயிகளிடம் கூறியதாவது:

திண்டிவனம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் சுமார் 25,000 ஏக்கர் பரப்பளவில் மணிலா சாகுபடி செய்யப்படுகிறது.

நடப்பு காரீப் பருவத்தில் பருவ நிலை நன்றாக உள்ளதால் சாகுபடிக்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது. மணிலா பயிரின் மகசூலை தீர்மானிப்பதில் பயிர் எண்ணிக்கை முக்கியப் பங்கு வகிக்கிறது. ஒரு சதுர மீட்டரில் 33 செடிகள் இருந்தால் மகசூல் அதிகரித்திடும்.

மணிலா சாகுபடியில் மகசூலை அதிகரித்திட தமிழக அரசு வேளாண்மைத் துறை மூலம் இயந்திர மணிலா விதைப்பு திட்டத்தினை, தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் அறிமுகப்படுத்தி உள்ளது.

இயந்திர முறையில் டிராக்டரில் இணைக்கப்பட்ட விதைப்பு இயந்திர உதவியுடன் மணிலா விதைப்பு செய்யப்படுகிறது. இதனால் விதை தேவை சுமார் 20 சதவீதம் குறைகிறது.

சீரான இடைவெளி மற்றும் சீரான பயிர் எண்ணிக்கையால் மகசூல் 25 முதல் 30 சதவீதம் அதிகரிக்கிறது. விவசாயிகள் ஊடுபயிராக ஆமணக்கு, மக்காசோளம் பயிரிட வாய்ப்புள்ளது.

ஊடுபயிர் சாகுபடியில் ஏக்கருக்கு 3 ஆயிரம் முதல் 4 ஆயிரம் வரை கூடுதல் வருவாய் கிடைக்கிறது. மணிலா இயந்திர விதைப்புக்கு அரசு மானியம் ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது. எனவே நடப்பு பருவத்தில் விவசாயிகள் மணிலா இயந்திர விதைப்பு மேற்கொண்டு கூடுதல் மகசூல் பெற வேண்டும என்றார். முகாமில் வேளாண் அலுவலர்கள் சங்குரு, கருணாநிதி கட்டளை ஊராட்சி மன்றத் தலைவர் மோகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். உதவி வேளாண்மை அலுவலர்கள் சுரேஷ்,விஜயலட்சுமி, யமுனா உள்ளிட்டோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### கத்திரிக்கா... குண்டு கத்தரிக்கா...



சாகுபடிக்கு ஏற்ற இனங்களாக கோ 1, கோ 2, எம்.டி.யு., 1, பி.கே.எம்., 1, பி.எல்.ஆர்., 1, கே.கே.எம்., 1, அண்ணாமலை ஈ.கோ.பி.எச்., 1 (வீரிய ஒட்டு ரகம்), அர்கா நவனீத், அர்காகேசவ், அர்காநிரி, அர்காசிரீஸ், அர்கா ஆனந்த் போன்றவை.

நல்ல வடிகால் வசதியுள்ள, அங்ககப் பொருட்கள் நிரம்பிய மண் வகைகள் உகந்தன. டிசம்பர் - ஜனவரி மற்றும் மே - ஜூன் மாதம் விதைப்பதற்கு உகந்த மாதங்கள். எக்டேருக்கு 400 கிராம் விதை தேவை. எக்டேருக்கு 100 சதுர மீட்டர் நாற்றங்கால் அளவு இருக்க வேண்டும்.

**விதையும், விதைப்பும்:** ஒரு கிலோ விதைகளுக்கு 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி அல்லது கேப்டான் அல்லது திரம் 2 கிராம் கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். மேலும் விதைகளை அசோஸ்பைரில்லம் கொண்டும் நேர்த்தி செய்ய வேண்டும்.

400 கிராம் விதைகளுக்கு 40 கிராம் அசோஸ்பைரில்லம் மற்றும் சிறிது அரிசிக் கஞ்சி சேர்த்து நேர்த்தி செய்ய வேண்டும். இவ்வாறு நேர்த்தி செய்யப்பட்ட

விதைகளை, உயரமான பாத்திகளில் 10 செ.மீ., இடைவெளியில் அரை அங்குல ஆழத்திற்கு கோடுகள் போட்டு அதில் விதைகளை பரவலாக தூவ வேண்டும். விதைத்த பின் மணல் போட்டு மூடி உடனே நீர் பாய்ச்ச வேண்டும்.

**உரப் பாசனம்:** கலப்பு ரகங்களுக்கு ஊட்டச்சத்தின் அளவு தழை, மணி மற்றும் சாம்பல் சத்து முறையே எக்டருக்கு 200:150:100 கி.கி., ஆகும். இதில் 75 சதவிகிதம் மணிச்சத்தை (112.5 கி.கி., மணிச்சத்து 703 கி.கி., சூப்பர் பாஸ்பேட்டில் உள்ளது) அடியுரமாக அளிக்க வேண்டும். மீதமுள்ள தழை, மணி மற்றும் சாம்பல் சத்து 200:37.5.100 கி.கி., உரப்பாசனமாக அளிக்க வேண்டும். தினமும் ஒரு மணி நேரம் நீர்ப்பாய்ச்ச வேண்டும். அதனுடன் கரையும் உரப்பாசனம் அளிக்க வேண்டும். அளவை பிரித்து பயிரின் ஆயுட்காலம் முழுவதும் மூன்று நாட்களுக்கு ஒரு முறை உரப்பாசனமாக அளிக்க வேண்டும். நீர் நிர்வாகம், களை கட்டுப்பாடு மற்றும் களை நிர்வாகம், வளர்ச்சி ஊக்கிகள், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு, தண்டு மற்றும் காய்த்துளைப்பான் நோய் தடுப்பு முறைகளை பின்பற்றி நடவு செய்த 55 முதல் 60 நாட்களில் முதல் அறுவடை ஆரம்பிக்கும். காய்கள் பிஞ்சாக விதைகள் முற்றுவதற்கு முன்பு அறுவடை செய்ய வேண்டும்.

காய்களை 4 முதல் 5 நாட்கள் இடைவெளியில் அறுவடை செய்யலாம்.எக்டேருக்கு 150 முதல் 160 நாட்களில் 25 முதல் 30 டன்கள், வீரிய ஒட்டு ரகங்களில் 45 முதல் 50 டன்கள் வரை மகசூல் கிடைக்கும். **- பூபதி, இணை இயக்குனர் தோட்டக்கலைத்துறை, மதுரை**

## பால் உற்பத்திக்கு தடையாகும் மடிவீக்க நோய்



கறவை மாடுகளை விவசாயிகள் வளர்ப்பது பால் உற்பத்திக்காகத்தான். மடி இல்லையேல் மாடு இல்லை என்பர். பால் உற்பத்தியின் முக்கிய அங்கமான மடியில் ஏதாவது கோளாறு ஏற்பட்டால் விவசாயிகள் உடன் கவனிக்க வேண்டும். கிராமங்களில் கறவை மாடு வளர்ப்போர் மடி நோயினை ஆரம்ப கால கட்டத்தில் சிகிச்சையளிக்காமல் விட்டு விடுகின்றனர். மாட்டிற்கு திருஷ்டி பட்டு விட்டது என நினைத்து சிகிச்சை அளிக்காமல் விட்டு விடுவர். குறைந்தது மூன்று நாளாவது இச்செயலை மாடு வளர்ப்போர் செய்யும் போது மடி வீக்க நோயின் தாக்கம் அதிகரித்து முற்றிய நிலையை அடைகிறது.

**காலம் கடந்த சிகிச்சை:** பின் கால்நடை மருத்துவரின் உதவியை நாடுகின்றனர். ஒரு சில நேரங்களின் மருந்துகளின் வீரியத்துக்கு கட்டுப்படாமல் கிருமிகளின் எண்ணிக்கை பெருகி பஞ்சு போன்ற திசுக்களை மாற்றி பாறாங்கல் போன்று திசுக்களை கொண்ட மடியாக மாற்றி விடுகிறது. இதன் விளைவு அந்த ஈத்தில் பால் உற்பத்தியை கணிசமான அளவில் விவசாயிகள் இழந்து விடுகின்றனர். மடிவீக்க நோய் முழுவதுமாக பாக்டீரியா கிருமிகளினால் உண்டாகிறது. பாலில் பாக்டீரியா கிருமிகள் வளர்வதற்கு ஏற்ற சூழ்நிலை அபரிதமாக இருப்பதால் எண்ணிக்கையில் பன்மடங்காக நாளுக்கு நாள் பாக்டீரியா கிருமிகள் பெருகுகின்றன. அவைகளின் வளர்ச்சி மாற்றத்தால் ஏற்படும் கழிவுகள் பால் மடியின் பஞ்சு போன்ற மிருது தன்மையை மாற்றி பாறாங்கல் போல் ஆக்குகின்றன.

**தென்படாத மடி வீக்கம்:** ஆரம்ப காலத்தில் மடி வீக்க நோயினால் மடி வீக்கம் தென்படாது. மாறாக சுரக்கும் பால் தண்ணீர் போன்றோ, திரிதிரியாகவோ

சுரந்தால் அது மடிவீக்க நோயின் ஆரம்ப அறிகுறியாகும். ஸ்டெர்ப்டோகாக்கை, ஸ்டெபிலோகாக்கை, சூடோமோனாஸ், கொரினிபாக்டீரியம், கோலிபார்ம் போன்ற பாக்டீரியா இனங்கள் மடியை பாழாக்குகின்றன. இது மடி நோய் ஏற்பட முதல் காரணமாகும். அதிகளவில் நீண்டு தொங்கும் இயற்கையாக அமைந்த மடி உள்ள கறவை மாடுகள் மடி நோய் தாக்குதலுக்கு எளிதில் ஆளாகின்றன. நீண்டு தொங்கும் மடியினால் தரையில் உராய்வு ஏற்பட்டு சிறு கீறல்கள் மடியில் உண்டாகும். இக்கீறல்கள் மூலம் பாக்டீரியா கிருமிகள் மடியினுள் உட்புகும்.

**மருத்துவ சிகிச்சை அவசியம்:** சாதாரணமாக பால் சுரக்கும் ஆரம்ப நாட்களிலும் பால் சுரப்பின் கடைசி நாட்களிலும் மடி வியாதி தோன்றலாம். சுரக்கின்ற பாலை முழுவதும் கறக்காமல் மடியில் விட்டு வைத்தால் இந்நோய் வர வாய்ப்புண்டு. மடி நோயால் விவசாயிகளின் அன்றாட வாழ்வில் பொருளாதார இழப்பை ஏற்படுத்துவதால் இந்நோய் கறவை மாடுகளுக்கு ஏற்பட்டால் உடனடியாக கால்நடை மருத்துவரின் உதவியை நாட வேண்டும். கறவை மாடுகளின் மடி பாகங்களை தேய்த்து கழுவி தினமும் சுத்தமாக பராமரிக்க வேண்டும். காற்றோட்டமான வெளிச்சமான கொட்டில்களில் கறவை மாடுகளை கட்டி பராமரிப்பது நல்லது. பால் கறக்க சுத்தமான பாத்திரங்களை பயன்படுத்த வேண்டும். பால் சுரப்பு கறவை மாடுகளில் குறைய நேரிட்டால் உடனடியாக கால்நடை மருத்துவரின் உதவியை கொண்டு உரிய காரணத்தை தெளிவுபடுத்தி கொள்ள வேண்டும். பின் அதற்கு தக்க மருத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். **-வி.ராஜேந்திரன், (ஓய்வு)இணை இயக்குனர், கால்நடை பராமரிப்புத்துறை, 94864 69044**

## 'அசில்' கோழிகளுடன் ஒருங்கிணைந்த பண்ணை



திண்டுக்கல் - மதுரை ரோட்டிலுள்ளது கோட்டைப்பட்டி. இங்கு கோழிப்பண்ணை, நிழல்வலைக்கூட நாற்றங்கால் தொழில்நுட்பத்தில் ஒருங்கிணைந்த பண்ணை அமைத்து மாதம் ரூ.30 ஆயிரம் வருவாய் ஈட்டுகிறார், விவசாயி சரவணன்.

**'அசில்' கோழிகள்:** இவர் 50 சென்ட் நிலத்தில் ரூ.60 ஆயிரம் மதிப்பில் கோழிப் பண்ணை 'செட்' அமைத்துள்ளார். ஆந்திராவில் கிடைக்கும் நாட்டுக் கோழி குஞ்சுகள் (அசில் ரகம்) தலா ரூ.30க்கு 100 குஞ்சுகளை வாங்கி, பண்ணையில் சுத்தமான மணல், சுண்ணாம்பு பூச்சு, சுகாதாரமான காற்றோட்டத்தில் கோழிகளை 90 நாள் வளர்க்கிறார். ஒரு அசில் ரக கோழிக்கு 90 நாட்களுக்கு 2.5 கிலோ தீவனம் தேவை. நூறு கிலோ தீவனத்திற்கு, '50 கிலோ மக்காச்சோளம், 10 கிலோ கம்பு, 10 கிலோ தவிடு, 5 கிலோ கடலை புண்ணாக்கு அல்லது சோள புண்ணாக்கு தேவை. இயந்திர அரவை மூலம் கோழி உண்ணும் அளவில் அரிசியை பதமாக உடைக்க வேண்டும்.

இத்துடன் உப்புச்சுவையற்ற கடல் கழிவு மீன்கள் 5 கிலோவை கலக்க வேண்டும். அது ஈரப்பதமாக இருப்பதற்காக, ஒரு கிலோ 'ரைஸ் பிராண்ட் ஆயில்' மற்றும் 'மினரல் மிக்சர்' ஒரு கிலோ (ரூ.50) வாங்கி கலந்து வைத்துக் கொள்ள வேண்டும். கோழிகளுக்கு காலை, மாலை தீவனம் வழங்க வேண்டும். சுகாதாரமான குடிநீரை வழங்க, வாரத்தின் இரு நாள் சிறிதளவு மஞ்சள் பொடி கலந்து கொடுக்க வேண்டும். இதுமாதிரி பராமரித்தால் 90 நாளில் ஒவ்வொரு கோழியும் ஒரு கிலோ முதல் ஒன்றரை கிலோ எடை இருக்கும்.

**மாதம் ரூ.30 ஆயிரம்**

சரவணன் கூறியதாவது: தீவனம் ரூ.75, கொள்முதல் ரூ.30, நோய் தாக்குதலின் போது தரப்படும் 'டானிக்' ரூ.15 ஆக ஒரு கோழிக்கு ரூ.115 வளர்ப்புச் செலவாகிறது. வளர்ந்த பிறகு ஒரு கிலோ ரூ.190 முதல் ரூ.250 வரை விற்பனை செய்யலாம். இதனால் 90 நாளில் 100 கோழிகள் விற்பனையில் ரூ.11 ஆயிரத்து 500 லாபம் கிடைக்கும். கோழி வளர்ப்புடன் மானிய உதவியுடன் பசுமைக்குடிலும் அமைத்துள்ளார். வீரியரக தக்காளி விதை 10 கிராம் ரூ.350, மிளகாய் 10 கிராம் ரூ.450க்கும், கத்தரி விதை 10 கிராம் ரூ.250க்கும் வாங்கினேன். குழித்தட்டில் தென்னமர மஞ்சு கொண்டு நிரப்பி, அதில் விதைகளை நட்டு எப்பொழுதும் ஈரப்பதம் இருக்குமாறு பார்த்து கொண்டேன்.

விதை, விதைப்பு, கூலி, பராமரிப்பு என மாதம் ரூ.2700 செலவானது. அதிக வெப்பம் தாக்காமல் இருக்க பூவாளியால் நீர் பாய்ச்சினேன். 30 நாட்களில் ஒரு லட்சம் நாற்றுக்கள் விற்பனைக்கு தயாரானது. 35 நாள் கத்தரி நாற்று ஒன்று 60 காசு, 25 நாள் தக்காளி நாற்று ஒன்று 45 காசு, 42 நாள் மிளகாய் நாற்று ஒன்று 65 காசுக்கு விற்றேன். இதன் மூலம் சந்தை நிலவரப்படி ரூ.7 ஆயிரம் வரை லாபம் கிடைக்கிறது. ஒருங்கிணைந்த பண்ணை மூலம் மாதம் ரூ.18,500 கிடைக்கிறது, என்றார். தொடர்புக்கு 97915 - 00783.

**-வீ.ஜெ.சுரேஷ், திண்டுக்கல்.**

**நீலகிரியில் மழை பர்லியாரில் அதிகம்**

ஊட்டி:நீண்ட இடைவெளிக்கு பின், பர்லியாரில் அதிகளவு மழை பெய்துள்ளது.

நீலகிரியின் சில இடங்களில், பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம், மாவட்டம் முழுக்க, 13 செ.மீ., மழை பெய்தது. இதில், அதிகபட்சமாக, பர்லியாரில் மட்டும் 6.3 செ.மீ., மழை பதிவாகி உள்ளது.

மாவட்டத்தில், பிற இடங்களை காட்டிலும் மண் சரிவு, நிலச்சரிவு அபாயமுள்ள பர்லியாரில் கூடுதல் மழை பெய்ததால், பேரிடர் முன்னெச்சரிக்கை

நடவடிக்கையில் மாவட்ட நிர்வாகம் கவனம் செலுத்த வேண்டும் என, அங்குள்ள மக்கள் வலியுறுத்தினர்.

## நேந்திர வாழைக்கு கடும் கிராக்கி அறுவடையில் விவசாயிகள் 'பிசி'

பந்தலுார்:நேந்திரம் வாழைக்கு அதிக விலை கிடைத்து வருவதால், வாழை விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

பந்தலுார், கூடலுார் பகுதிகளில், தேயிலை மற்றும் நேந்திர வாழை விவசாயத்தில் பலர் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது நேந்திரம் வாழைக்கு நல்ல விலை கிடைத்து வருவதால்,
இங்கு விளைந்துள்ள வாழையை அறுவடை செய்யும் பணியில் பல விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுவரை கிலோ, 24 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட நேந்திரம் வாழை, தற்போது கிலோ, 53 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

அத்திச்சால் பகுதி விவசாயி கிருஷ்ணன் கூறுகையில், "ஆண்டிற்கு ஒருமுறை அறுவடை செய்யப்படும் நேந்திரம் வாழை விவசாயம், கடந்த சில ஆண்டுகளாக நஷ்டத்தை கண்டது. தற்போது, ஓணம் சீசனுக்காக, கேரளாவுக்கு அதிகளவில் கொண்டு செல்லப்படுகிறது. கூடுதல் விலை கிடைத்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்,"என்றார்.

## தாண்டிக்குடியில் கொட்டியது மழை

காண்டிக்குடி: காண்டிக்குடி மற்றும் அகனைச்சுற்றியுள்ள மலைக்கிராமங்களில் நேற்று மதியம் கனமழை பெய்தது. காலை முதலே சுட்டெரிக்கும் வெயில் நீடித்த நிலையில் மதியம் 1 மணிக்கு காற்றுடன் கனமழை பெய்யத் துவங்கியது. தொடர்ந்து 2 மணி நேரம் வெளுத்து வாங்கியது. றற்போதைய மழை காபி, ஆரஞ்சு, அவகடா, மிளகு விளைச்சலுக்கு ஏற்றதாக அமைந்தது. தொடர்ந்து பீன்ஸ், சவ்சவ், அவரை உள்ளிட்ட குறுவிவசாய பயிர்களுக்கும் ஏற்றகாக அமைந்கது. கடந்க சில மாகங்களாக காற்றுடன் நீடித்த வறட்சிக்கு மத்தியில் பெய்த கனமழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

## செம்மேடு சர்க்கரை ஆலையில் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

செஞ்சி: செம்மேடு ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையில்,கரும்பு விவசாயிகளுக்கு நவீன கரும்புசாகுபடி குறித்து பயிற்சி முகாம் நடந்தது.

செஞ்சி தாலுகா செம்மேடு சர்க்கரை ஆலை வளாகத்தில், மகளிர் கரும்பு விவசாயிகளுக்கு நவீன கரும்பு சாகுபடி குறித்து பயிற்சி முகாம் நடந்தது.

இதில், ஆலையின் கரும்பு துணை பொது மேலாளர் ரங்கநாதன், விரிவாக்க மேலாளர் வெங்கடேசபெருமாள் மற்றும் விவசாய பயிற்சி அலுவலர் வித்யா ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

ஆழ் ஊழவு, விதைக்

கரும்பின் முக்கியத்துவம், சொட்டுநீர் பாசனம், நிழல் வலை மூலம் செதில் பரு நாற்று நடவு, இயற்கை இடுபொருட்கள், உயிர் உரங்கள் உபயோகித்தல், கட்டை கரும்பு சாகுபடி, பூச்சியியல் மேலாண்மை, களைக்கட்டுப்பாடு போன்ற தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கினர். இதில் 20 பெண் கரும்பு விவசாயிகள் பங்கேற்றனர்.

## மாவட்டம் முழுவதும் கனமழை தி.கோட்டில் 63 மி.மீ., பதிவு

நாமக்கல்: மாவட்டத்தில், திருச்செங்கோட்டில் அதிக பட்சமாக, 63 மி.மீ., மழை அளவு பதிவாகி உள்ளது. நாமக்கல் மாவட்டத்தில், நாமக்கல், சேந்தமங்கலம், கொல்லிமலை உள்ளிட்ட பல்வேறு இடங்களில், கடந்த, இரண்டு நாட்களாக கனமழை பெய்து வருகிறது. நேற்று முன்தினமும் பரவலாக மழை பெய்தது. அதிக பட்சமாக, திருச்செங்கோட்டில், 63 மி.மீ., மழை பதிவாகி உள்ளது. மாவட்டத்தில் பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்): எருமப்பட்டி, 40, குமாரபாளையம், 49, மங்களபுரம், 24, நாமக்கல், 28, புதுச்சத்திரம், 5, ராசிபுரம், 53, சேந்தமங்கலம், 43, திருச்செங்கோடு, 63.

**கால்நடைகளை பாதுகாக்கும் 'கொடாப்பு' தயாரிக்கும் பணியில் விவசாயிகள் தீவிரம்**

திருப்புவனம்: திருப்புவனத்தை சுற்றியுள்ள பகுதிகளில் விவசாயிகள் கால்நடை வளர்ப்பை தொழிலாக வைத்துள்ளனர். விவசாய பணியுடன் கால்நடைகளையும் வளர்த்து வருவதால் அவர்களுக்கு இது இரட்டை லாபம் என ஆடு, மாடு, கோழி வளர்த்து லாபம் ஈட்டுகின்றனர். கீழடி பகுதி விவசாயிகள் செம்மறி ஆடுகளை அதிகம் வளர்த்து வருகின்றனர்.

விவசாயிகள் பலரும் குழுவாக இணைந்தும் ஆடுகளை வளர்க்கின்றனர். 100 ஆடுகள் முதல் ஆயிரம் ஆடுகள் வரை வளர்த்து வயல்வெளிகளில் கிடை அமைத்து வருகின்றனர்.

வயல்வெளிகளில் கிடை அமைப்பதன் மூலம் இயற்கையான உரம் கிடைப்பதால் விவசாயிகளிடம் வரவேற்பு கிடைத்துள்ளது.

ஆடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப கிடைக்கும் பணம் பிரித்து வழங்கப்படுகிறது. ஒரு வயலில் குறைந்த பட்சம் 10 முதல் 20 நாட்கள் வரை கிடை அமைக்கப்படுகிறது. செயற்கை உரத்தை காட்டிலும் கால்நடைகள் மூலம் கிடைக்கும் உரத்தினால் மண்வளம் அதிகரிக்கிறது. விரைவில் குளிர்காலம் தொடங்க இருப்பதால் கிடை அமைக்க வாய்ப்பில்லை. இதற்காக பிறந்து சில நாட்களே ஆன குட்டிகளை அடைப்பதற்கு 'கொடாப்பு' எனப்படும் கூடைகளை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கால்நடை விவசாயி ஆறுமுகம் கூறுகையில்,“ இந்த கொடாப்பில் 25 குட்டிகள் வரை அடைத்து பாதுகாக்கலாம்.ஒரு கொடாப்பு அமைக்க 3 முதல் 5 ஆயிரம் ரூபாய் வரை செலவாகும். மேய்ச்சல் நிலம் குறைந்து கொண்டே வருவதால் முன்பு போல ஆடுகள் வளர்க்க முடியவில்லை.

குறைந்த அளவிலேயே வளர்த்து வருகிறோம்.விரைவில் குளிர்காலம் தொடங்குவதால் ஆடுகளை வைத்து கிடை போட முடியாது.

எங்களுக்கு சொந்தமான இடத்தில் ஆடுகளை அடைத்து வைத்து அதன்மூலம் கிடைக்கும் கழிவுகளை சேமித்து வைத்து பின்னர் விற்பனை செய்வோம்,” என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## பஞ்சு விலை 5 நாளில் ரூ.5 ஆயிரம் குறைந்தது



கோவை: தமிழகத்தில் போதுமான அளவில் பருத்தி உற்பத்தி இல்லாததால், ஆந்திரா, கர்நாடகா, மத்திய பிரதேசம், குஜராத் ஆகிய மாநிலங்களில் இருந்து பஞ்சை நூற்பாலைகள் கொள்முதல் செய்கின்றன. பஞ்சு விலை கடந்த ஏப்ரலில் ஒரு கண்டி (355கிலோ) ரூ.35,000 ஆக இருந்தது. பதுக்கல் காரணமாக கடந்த 3 மாதத்தில் இது ரூ.54,000 ஆக உயர்ந்தது.

இந்நிலையில் கடந்த வாரம் 23ம் தேதி ரூ.3 ஆயிரம் குறைந்து ரூ.51 ஆயிரத்திற்கு விற்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக நேற்று (26ம் தேதி) மேலும் ரூ.2,000 குறைந்து, ரூ.49,000க்கு விற்கப்பட்டுள்ளது. கடந்த 5 நாளில் ரூ.5 ஆயிரம் வரை விலை குறைந்துள்ளது.

## புதிய வேளாண் காப்பீட்டு திட்டம் அறிமுகம்

மேல்மலையனூர், : செஞ்சி வட்டம் நாட்டார்மங்கலம் வேளாண்மை துறையின் சார்பாக இந்த ஆண்டு புதிய வேளாண் காப்பீட்டு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2016-2017ம் ஆண்டு காரிப் பருவத்திலிருந்து இந்த திட்டம் செயல்படுத்தப்படும். பழைய திட்டத்தின்படி வருவாய் குறுவட்ட அளவில் திட்டம் செயல்படுத்தப்பட்டது.புதிய திட்டத்தின்படி கிராம அளவில் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இந்த திட்டம் சம்பா பயிர்களுக்கு 1.5 சதவீதம் அதிகபட்சம் பிரிமியம் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மகசூல் இழப்பு, தீ, மின்னல், புயல், ஆலங்கட்டி மழை, சூறாவளி காற்று, வெள்ளம், சுழல்காற்று, நிலச்சரிவு, வறட்சி, பயிர்நோய் மற்றும் பூச்சிகள் போன்றவற்றால் உண்டாகும் நஷ்டம் இந்த திட்டத்தின் கீழ் வழங்கப்படும். மேலும் அறுவடைக்கு பின்னர் வயலில் வைக்கப்பட்டிருக்கும் பயிர்களுக்கும் இந்த திட்டம் பொருந்தும். இந்த திட்டத்தின்கீழ் பயிர்கடன் பெறுவோர், பயிர்கடன் பெறாதவர்கள் ஆகிய விவசாயிகள் சேர தகுதி உடையவர்கள். இந்த திட்டத்தில் பயன்பெற உள்ள விவசாயிகள் சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம், தேசிய மயமாக்கப்பட்ட வங்கி, உதவி வேளாண்மை கூட்டுறவு சங்கம், தேசிய விரிவாக்க மையம் ஆகியவற்றை தொடர்பு கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்த தகவலை வல்லம் வேளாண்மை உதவி இயக்குநர் ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

## புதன்சந்தையில் மாடுகளின் விலை உயர்வு

சேந்தமங்கலம் : புதன் மாட்டுச்சந்தை தமிழக அளவில் பிரசித்தி பெற்றது. திங்கள்கிழமை இரவு முதல் செவ்வாய் மதியம் வரை சந்தை கூடுவது வழக்கம். மாடுகளை வாங்க கோவை, பொள்ளாச்சி, கேரளா, ஆந்திரா, கர்நாடகம், ஈரோடு உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வியாபாரிகள் கலந்து கொள்வார்கள். நேற்று கூடிய சந்தையில் கடந்த வாரம் ரூ.30 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட இறைச்சிமாடு, இந்த வாரம் ரூ.32 ஆயிரத்திற்கும், கடந்த வாரம் ரூ.40 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட கறவைமாடு இந்த வாரம் ரூ.42 ஆயிரத்திற்கு விற்கப்பட்டது. 6 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட கன்றுக்குட்டி ரூ.8 ஆயிரத்திற்கு விற்கப்பட்டது.

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கொட்டித்தீர்த்தது கனமழை 699.50 மி.மீ., பதிவு**

கிருஷ்ணகிரி : கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் நேற்று முன்தினம் இரவு கனமழை பெய்தது. ஒரு நாள் இரவில் 699.50 மி.மீ., மழை பதிவானதால் மகிழ்ச்சியடைந்த விவசாயிகள், நடவு பணிகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு, கடந்த மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் கடும் வெயில் சுட்டெரித்தது. இதனால், மக்கள் அவதிக்குள்ளாகி வந்தனர். இந்நிலையில் வெப்ப சலனம் காரணமாக, கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது.

நேற்று முன்தினம் மாலை கிருஷ்ணகிரி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் வானம் மேகமூட்டமாக காணப்பட்டது. இரவு சுமார் 8 மணியளவில் மழை பெய்யத் தொடங்கியது. இதில் பல இடங்களில் விடிய, விடிய மழை பெய்தது. சாலைகளில் மழைநீருடன் சாக்கடை கழிவுநீர் கலந்து சென்றது. தாழ்வான பகுதிகளில் இருந்த வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தது. மாவட்டத்தில் அதிகபட்சமாக தேன்கனிக்கோட்டையில் 80 மி.மீ மழையும், சூளகிரியில் 77 மி.மீ மழையும் பதிவானது.

கிராமப்புற பகுதிகளில் தற்போது விவசாயிகள் நிலக்கடலை பயிரிட்டுள்ளனர். அவை பூ விடும் தருவாயில் உள்ளது. இந்த திடீர் மழையால் நிலக்கடலையில் அதிகபடியாக பூ வைத்து செழித்து வளரும் என விவசாயிகள் தெரிவித்தனர். மேலும், ஆடி பட்டத்தையொட்டி ராகி, அவரை, துவரை உள்ளிட்டவைகளை விவசாயிகள் பயிர் செய்வர். இதற்கான பணிகளில் தற்ேபாது விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

நேற்று காலை 8 மணி நிலவரப்படி மாவட்டத்தில் மழையளவு (மில்லி மீட்டரில்): தேன்கனிக்கோட்டை 80, சூளகிரி 77, ஓசூர் 76, நெடுங்கல் 69.6, பாரூர் 69.4, அஞ்செட்டி 60.5, கிருஷ்ணகிரி 60.2, பெனுகொண்டாபுரம் 52.4, போச்சம்பள்ளி 47.4, ராயக்கோட்டை 47, ஊத்தங்கரை 40, தளி 20 என மொத்தம் 699.50 மில்லி மீட்டர் மழை பதிவானது.

## திருச்சி மாவட்டத்தில் 431 மி.மீ மழை கொட்டித்தீர்த்தது

திருச்சி : திருச்சி மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் மொத்தமாக 431 மி.மீ மழை பெய்தது.
திருச்சி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக இரவில் மழை பெய்து வருகிறது. நேற்றுமுன்தினம் மாநகரில் இரவு 7 மணிக்கு துவங்கி, 11 மணிக்கும் மேலும் மழை தூறிக்கொண்டே இருந்தது. அன்றைய தினம் மாவட்டம் முழுவதும் மொத்தமாக 431.80 மி.மீ மழை பதிவானது. சராசரி 17.27 மி.மீ. துவாக்குடியில் அதிகப்பட்சமாக 75 மி.மீ, துறையூரில் குறைந்த பட்சமாக 2 மி.மீ மழை மழை பெய்தது. நந்தியார் தலைப்பு, புள்ளம்பாடி, குப்பம்பட்டி, தென்பரநாடு உள்ளிட்ட பகுதிகளில் போதிய மழை பெய்ய வில்லை. மற்ற பகுதிகளில் கனத்த மழை கொட்டி தீர்த்தது. ரங்கம் சுப்பிரமணியபுரம் பகுதியில் பலத்த மழை பெய்தபோது ஒரு மரம் மின்சார லைனில் சாய்ந்து ஒயர் அறுந்ததால் அந்த பகுதியில் மின்தடை ஏற்பட்டது. இதனால் விடிய, விடிய அப்பகுதி மக்கள் இருளில் தவித்தனர். நேற்று காலை ஒயர்கள் சரி செய்யப்பட்டு மின் இணைப்பு கொடுக்கப்பட்டது. திருச்சி மாவட்டத்தில் நேற்று காலை 8 மணி வரை கடந்த 24 மணி நேரத்தில் முக்கிய இடங்களில் பெய்த மழை அளவு(மி.மீ) வருமாறு: லால்குடி 9.30, மணப்பாறை 7.40, முசிறி 10, தா.பேட்டை 15, திருச்சி ஏர்போர்ட் 49, டவுன் 30, மருங்காபுரி 10.20, பொன்னனியாறு டேம் 11, நவலூர் குட்டப்பட்டு 13, கல்லக்குடி 2.50, வாத்தலை அணைக்கட்டு 47.20, சமயபுரம் 5, தேவிமங்கலம் 40.20, சிறுகுடி 5, புலிவலம் 5, கோவில்பட்டி 16.20, பொன்மலை 49.40, ஜங்ஷன் 29.40.

## கால்நடை மருத்துவ முகாமில் அசோலா தீவன உற்பத்தி செயல்விளக்க நிகழ்ச்சி: திரளான விவசாயிகள் பங்கேற்பு

கரூர்: தாந்தோணி ஊராட்சி ஒன்றியம் ஆண்டாங்கோயில் கிழக்கு ஊராட்சிக்குட்பட்ட ஆண்டாங்கோயில் புதூரில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் சிறப்பு கால்நடை பாதுகாப்பு திட்ட மருத்துவ முகாம் நடைபெற்றது. கலெக்டர் காகர்லா உஷா முகாமை துவக்கி வைத்தார்.மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 112 கால்நடை பாதுகாப்பு திட்ட சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்த அனுமதி பெற்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த முகாமில் 300க்கும் மேற்பட்ட கால்நடைகள் கலந்து கொண்டு பயன்பெற்றன. இந்த கால்நடைகளுக்கு சினை

ஆய்வு, செயற்கை முறை கருவூட்டல் சிகிச்சை, குடற்புழு நீக்கம், தடுப்பூசி பணிகள் போன்றவை மேற்கொள்ளப்பட்டது. மேலும் கால்நடை வளர்ப்பவர்ளுக்கு அசோலா தீவன உற்பத்தி குறித்த செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. பின்னர் கால்நடை வளர்ப்பவர்களுககு தீவன புல் உற்பத்தி செய்வதற்காக தீவன புல் கரணைகள், தீவன சோள விதைகள், தாது உப்பு கலவைகளையும், சிறந்த கலப்பின கிடாரிகள் தேர்வு செய்யப்பட்டு பரிசுகளை கலெக்டர் வழங்கினார். முகாமில் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் பழனிவேல், துணை இயக்குநர் கதிர்வேல், உதவி இயக்குநர்கள் ராஜேந்திரன், கால்நடை மருத்துவ பல்கலைக் கழக பேராசிரியர் வசந்தகுமார், உதவி பேராசிரியர் விஜயகுமார் உட்பட அனைத்து அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

**மாவட்டம் முழுவதும் பரவலாக மழை**

கரூர் : கரூர் மாவட்டம் முழுவதும் நேற்று பரவலாக மழை பெய்தது. கரூரில் நேற்று காலை முதல் வெயில் கொளுத்தியது. மாலையில் குளிந்த காற்றுவீசியது. இரவு 8மணியளவில் லேசாக தூறத் தொடங்கிய மழை அதன்பின் கொட்டத் தொடங்கியது. இதனால் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியது. பிறபகுதிகளில் மழை பெய்தவந்த நிலையில் கரூரில் லேசான தூறல் மட்டுமே விழுந்துவந்த நிலையில் நேற்று இரவு பெய்த மழையால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். இதேபோல் தோகைமலை ஒன்றியம் தோகைமலை, தெலுங்கப்பட்டி, சின்னரெட்டியப்பட்டி, வெள்ளாளபட்டி பகுதிகளில் பலத்த மழை கொட்டியது. க.பரமத்தி ஒன்றிய பகுதிகளில் இரவு 8 மணி முதல் சாரல் மழை தொடர்ந்து பெய்தது. இந்த மழை தொடர்ந்தால் விவசாய பணிகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

## அதிராம்பட்டினத்தில் 52.40 மிமீட்டர் மழை

தஞ்சை : தஞ்சை மாவட்டம் அதிராம்பட்டினத்தில் அதிகப்பட்சமாக 52.40 மிமீட்டர் மழை பெய்தது. நேற்று மாலை வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. தஞ்சை மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக மாலை நேரத்தில் பரவலாக மழை பெய்தது. நேற்று காலை முதல் கடும் வெயில் அடித்த நிலையில் மதியம் மூலம் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. மாலை வரை ேமகமூட்டம் நீடித்தது. ஆனால் மழை எதுவும் பெய்யவில்லை. இந் நிலையில் தஞ்சை மாவட்டத்தில் நேற்று காலை 8.30 மணி வரை பதிவான மழை அளவு விவரம் (மி.மீ.): அதிராம்பட்டிணம் 52.40,

பாபநாசம் 16, தஞ்சாவூர் 10, திருவையாறு 26, திருக்காட்டுப்பள்ளி 1, வல்லம் 6, கல்லணை 17, அய்யம்பேட்டை 18, திருவிடைமருதூர் 1, மஞ்சலாறு 1.2, பூதலூர் 16.8, வெட்டிக்காடு 5.8, ஈச்சன்விடுதி 35, ஒரத்தநாடு 2.60, மதுக்கூர் 8.4, பட்டுக்கோட்டை 8, பேராவூரணி 19, அணைக்கரை 34.8 என மழை பதிவாகியுள்ளது. பாபநாசம் அடுத்த கபிஸ்தலம் அடுத்த சுற்று வட்டாரப் பகுதிகளில் நேற்று முன் தினம் இரவு பலத்த மழை பெய்தது. சுமார் 2 மணி நேரம் பெய்த மழையால் சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. இந்த மழை கரும்பிற்கு ஏற்றதென விவசாயிகள் தெரிவித்தனர்.

## டெல்டா விவசாயிகள் விலை போகும் பயிர் சாகுபடி செய்தால் லாபம் ஈட்டலாம்

மயிலாடுதுறை : டெல்டா விவசாயிகள் விலை போகக்கூடிய பயிர்களை சாகுபடி செய்தால் அதிக லாபம் ஈட்டலாம் என்று கோவை வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் பேசினார். மயிலாடுதுறை அருகே உள்ள மங்கநல்லூரில் வீரசோழன் உழவன் உற்பத்தியாளர்கள் கலந்தாய்வு கூட்டம் நடந்தது. ஓய்வுபெற்ற வேளாண் விஞ்ஞானி அருள்சேகர், வேளாண்மை அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் கவிதாஸ்ரீ, திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி பேராரிசரியர் விஸ்வநாதன் முன்னிலை வகித்தனர். ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ரவி வரவேற்றார். சென்னை வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இணை இயக்குனர் இளங்கோவன், நாகை நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் கணேஷ், வேளாண் இணை இயக்குனர் சேகர் ஆகியோர் பேசினர். கோவை வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் ராமசாமி பேசுகையில், உலக பொருளாதாரத்தில் 33 சதவீதம் விவசாயத்திலிருந்து வருமானம் வருகிறது. உழவன் ஒருவனால் மட்டும் தான் உலகுக்கு எல்லாவற்றையும் உற்பத்தி செய்து கொடுக்க முடியும். காவிரி டெல்டா பகுதியில் நெல் உற்பத்தி அதிகமாக இருப்பதால் உரிய விலை கிடைப்பதில்லை. நெல்லிலிருந்து தயாரிக்கக்கூய அவல், பொறி, பொறி உருண்டை தயாரித்தால் அதிக விலை கிடைக்கும். விவசாயத்தோடு துணை தொழிலையும் செய்ய வேண்டும். தென்னை, பனை மற்றும் பழமரங்கள், கால்நடைகளை வளர்க்க வேண்டும், நெல்லை மட்டும் நம்பி இல்லாமல் விலைபோகக்கூடிய பயிர்களையும் சாகுபடி செய்ய வேண்டும். நெல்லை தவிர்த்து உளுந்து பயிறு, பருத்தி,

காயகறிகள் என்று மாற்றுப்பயிர்களை சாகுபடி செய்தால் தான் அதிக லாபம் ஈட்ட முடியும் என்றார். சங்க தலைவர் சந்தானகிருஷ்ணன், சண்முகநாதன் உட்பட பல விவசாயிகள் கலந்து கொண்டனர். ஜானகிராமன் நன்றி கூறினார்.

## கடலையில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பண்ணை பள்ளி

கொள்ளிடம் : கொள்ளிடம் அருகே குமிளங்காடு கிராமத்தில் மாநில வேளாண்மைத்துறை விரிவாக்க உறுதுணை சீரமைப்பு திட்டத்தின்கீழ் கடலையில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பள்ளி நடந்தது. வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அப்பன்ராஜ் தலைமை வகித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் ரேகா வரவேற்றார். கடலையில் பூச்சி மற்றும் நோய் பாதுகாப்பு மற்றும் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்து 25 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. வட்டார வேளாண் அலுவலர் ராஜராஜன், வேளாண்மை வளர்ச்சி அலுவலர் சுந்தரம், அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர் கார்த்திக் ஆகியோர் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். உதவி தொழில்நுட்ப மேலாளர் சவுந்தரராஜன் நன்றி கூறினார்.

## நாகை மாவட்டத்தில் 41.50 மி.மீ. மழை பதிவு

நாகை: நாகை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு 41.50 மி.மீட்டர் மழை பதிவானது. நாகை மாவட்டத்தில் கோடை முடிந்தும் வெப்பம் குறையவில்லை. தமிழகம் முழுவதும் வெப்ப சுழற்சியின் காரணமாக அடைமழை பெய்து வரும் நிலையில் மாவட்டத்தில் சிறிய தூறல் மழைகூட பெய்யவில்லை. இதனால் மக்கள் அவதிக்கு உள்ளாகினர். மேலும் வெப்பத்தை தணிக்க மோர், இளநீர், குளிர்பானங்களை குடித்து ஓரளவு வெப்பத்தை தணித்து வந்தனர். இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு 11 மணிக்கு துவங்கி அரை மணிநேரம் பரவலாக மழை பெய்தது. இதனால் ஓரளவு வெப்பம் தணிந்து குளிர்ந்த காற்று வீசியது. நாகை மாவட்டத்தில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீட்டரில்) வருமாறு: நாகப்பட்டினம் 8.50, மயிலாடுதுறை 5.40, வேதாண்யம் 7.20, திருப்பூண்டி 3, தலைஞாயிறு 7.40, மணல்மேடு 10 மி.மீட்டரில் மழை பதிவானது. மாவட்டத்தில் மொத்தம் 41.50 மி.மீட்டர் மழை பதிவானது. இது சராசரியாக 4.61 மி.மீட்டராகும். நாகை மாவட்டத்தில், சீர்காழி, தரங்கம்பாடி, கொள்ளிடம் ஆகிய பகுதிகளில் மழை இல்லை.

## இன்றைய வேளாண் செய்திகள்

# கல்வராயன்மலையில் பலத்த மழை: கோமுகி அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 16 அடி உயர்ந்தது



கச்சிராயப்பாளையம்,

கல்வராயன்மலையில் பெய்த பலத்த மழை காரணமாக கோமுகி அணையின் நீர்மட்டம் ஒரேநாளில் 16 அடி உயர்ந்தது.

பலத்தமழை

விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக அவ்வப்போது மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் காலை முதல் மாலை வரை கள்ளக்குறிச்சி, கல்வராயன்மலை, கச்சிராயப்பாளையம்,

சங்கராபுரம், ரிஷிவந்தியம், தியாகதுருகம் ஆகிய பகுதிகளில் கடும் வெயில் சுட்டெரித்தது. பின்னர் மாலை 6 மணிக்கு மேல் குளிர்ந்த காற்று வீசியது. சிறிது நேரத்தில் சாரல் மழை பெய்ய தொடங்கியது.

பின்னர் அவ்வப்போது பலத்த மழையாக பெய்தது. மலை பகுதியில் இரவு 11 மணிக்கு பெய்ய தொடங்கி அதிகாலை 3 மணி வரையில் பலத்த மழையாக கொட்டித் தீர்த்தது. இதனால் கல்வராயன்மலை பகுதி நீரோடைகளில் மழைவெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இந்த மழையால் பெரியார், மேகம், கவியம் போன்ற நீர்வீழ்ச்சிகளில் தண்ணீர் கொட்டி வருகிறது.

<u>நீர்மட்டம் உயர்வு</u>

கல்வராயன்மலையில் பெய்த மழை காரணமாக அடிவார பகுதியில் உள்ள கல்படை, பொட்டியம் ஆறுகளில் நேற்று நள்ளிரவு முதல் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. எனவே கல்படை–மல்லிகைப்பாடி இடையே நேற்று மதியம் வரை போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. இதனால் மல்லிகைப்பாடி சுற்றுவட்டார கிராம மக்கள் வெளிஇடங்களுக்கு சென்று வரமுடியாமல் சிரமமடைந்தனர். நள்ளிரவு பெய்த மழை காரணமாக கல்படை, பொட்டியம் ஆறுகள் வழியாக கோமுகி அணைக்கு வினாடிக்கு 1,500 கனஅடி தண்ணீர் வந்தது. இந்த நீர்வரத்து காரணமாக 12 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் நேற்று மதியம் 3 மணி நிலவரப்படி கிடுகிடுவென 16 அடி உயர்ந்து 28 அடியை எட்டியது.

<u>50 கனஅடி நீர் வெளியேற்றம்</u>

இந்தநிலையில் நேற்று மதியத்துக்கு பிறகு கல்படை, பொட்டியம் ஆறுகளில் நீர்வரத்து படிப்படியாக குறைந்து தற்போது வினாடிக்கு 500கனஅடி வந்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து அணைக்கு தண்ணீர் வந்து கொண்டிருப்பதால் பொதுப்பணித்துறை அதிகாரிகள் அணையின் பாதுகாப்பு கருதி நேற்று காலை முதல் வினாடிக்கு 50 கனஅடி நீரை கோமுகி ஆற்றில் திறந்து விட்டுள்ளனர்.

இந்த நிலையில் நேற்று மாலை முதல் கல்வராயன்மலையில் மீண்டும் மழை பெய்து வருகிறது.

46 அடி கொள்ளளவு கொண்ட கோமுகி அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருவதால் விவசாயிகள் பெரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## தென்பெண்ணையாற்றில் ரூ.12½ கோடியில் தடுப்பணை கட்டும் பணி கலெக்டர் லட்சுமி ஆய்வு



விழுப்புரம்,

தென்பெண்ணையாற்றில் கட்டப்பட்ட தரைமட்ட தடுப்புச்சுவரை கலெக்டர் லட்சுமி ஆய்வு செய்தார்.

<u>தடுப்பணை</u>

விழுப்புரம் அருகே பிடாகத்திற்கும் பேரங்கியூருக்கும் இடையே உள்ள தென்பெண்ணையாற்றில் மழைக்காலங்களின்போது தண்ணீரை சேமித்து வைத்து சுற்றியுள்ள 20 கிராமங்களில் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தும் வகையிலும், 4,040 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசனம் பெறும் வகையிலும் நபார்டு நிதி உதவி திட்டத்தின் கீழ் ரூ.12 கோடியே 63 லட்சம் மதிப்பில் 740 மீட்டர் நீளத்திற்கு தடுப்பணை( தரைமட்ட தடுப்புச்சுவர்) அமைக்கப்பட்டது. இந்த பணிகள் முடிவடைந்து 4 மாத காலம் ஆகிறது. அவ்வப்போது இந்த பணியை நபார்டு அதிகாரிகளும், பொதுப்பணித்துறையினரும் பார்வையிட்டு வருகின்றனர்.

## கலெக்டர் ஆய்வு

இந்த நிலையில் நேற்று இந்த தடுப்பணையை மாவட்ட கலெக்டர் லட்சுமி நேரில் பார்வையிட்டார். அப்போது பணிகள் தரமான முறையில் செய்யப்பட்டுள்ளதா? என ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது நபார்டு உதவி பொது மேலாளர் விக்ரமன், பொதுப்பணித்துறை செயற் பொறியாளர் சண்முகம், உதவி செயற் பொறியாளர் பாலமுருகன், உதவி பொறியாளர்கள் ஞானசேகர், பிரசன்னா ஆகியோர் உடனிருந்தனர்.